இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தின் முடிவின்படி பேரவையின் இந்தக் கூட்டத் தொடர் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கின்றேன்,

26—3—1992 வியாழக்கிழமை அன்று நிதி சம்பந்தப் பட்ட அலுவல்கள் முடிந்தவுடன் இன்று மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படும். 10—4—1992 அன்று எடுத்துக் கொள்ளவிருக்கும் மானியக் கோரிக்கைகள் 23—கூட்டுறவு மற்றும் 35—நுகர் பொருள் வழங்கல் 8—4—1992 அன்று எடுத்துக்கொள்ளப் படும். 8—4—1992 அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண் டிய மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் 10—4—1992 அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடி வுற்றன, பேரவை மீண்டும் நாளை (25—3—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.24 மணிக்கு ஒத்திவைக் கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

34. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

35. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

37. கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93, (தமிழ், ஆங்கிலம்),

38. கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்— நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93 (தமிழ் ஆங்கிலம்).

39. கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போர்க்குவரத்து மற்றும் கோரிக்கை எண் 58—சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு, 1992-93, (தமிழ், ஆங்கிலம்),

40. கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் கோரிக்கை எண் 59—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

41. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து கப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

42. தமிழ்நாடு துறைமுகத் துறையின் சாதனை விளக்க அறிக்கை, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

43. காட்டுவளத் துறையின் சாதனை அறிக்கை, 1992-93. (ஆங்கிலம்).

44. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை பற்றிய சாதனை அறிக்கை, 1992-93. (ஆங்கிலம்).

TRUTH ALONE TRIUMPHS